**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**STC No. 2685/2016**

Deposition of the witness for Prosecution **PW** 6
Name : **உலகநாதன்**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (29.06.2026)

A1, A2 absent, petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் சொக்கம்பட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.05.2016 ம் தேதி நான் குற்றாலம் காவல் நிலையத்தில் சிறப்புஉதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது தென்காசி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சிகிச்சையில் இருந்த மாரியப்பன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை 10.00 மணிக்கு பெற்று 11.00 மணிக்கு நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண்.137/2016 , சட்டபிரிவுகள் 294(பி), 323, 506(1) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகும். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். அசல் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை விசாரணைக்காக உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இதுசம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 மாரியப்பன் என்பவர் கொடுத்த புகார் மனுவில் சுண்டுவிரலில் காயம் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் தகவல் அறிக்கையில்

இடது கை சுண்டுவிரலில் காயம் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகார் மனுவில் சொல்லாததை முதல் தகவ்ல அறிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பின் யோசனையினால் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது அதனால் தான் மாற்றி சுண்டுவிரலில் காயம் இருந்ததாக பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் மனுவில் மாரியப்பன் என்பவரே கையொப்பம் செய்யவில்லை பின்யோசனை செய்து உண்மையான புகார் வாக்குமூலம் மறைக்கப்பட்டு இந்த புகார் மனு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொன்ன நாளில் சொன்ன தேதியில் அ.சா.1 என்னிடம் புகார் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 1வது எதிரி செல்வக்குமார் புகார்தாரர் மாரியப்பன் என்பவர் தன்னை அதே நாள் அதே சம்பவத்தில் அசிங்கமாக பேசி, தன்னை தாக்கி கொலைமிரட்டல் விடுத்ததாக குற்ற எண்.138/2016 வழக்கை நான் தான் பதிவுசெய்துள்ளேன் என்றால் சரிதான்.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.06.29 17:37:41 +0530

Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**STC No. 2685/2016**

Deposition of the witness for Prosecution **PW** 7
Name : **பாண்டித்துரை**
Father's/Husband's Name :

Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (29.06.2026)

A1, A2 absent, petition filed and allowed.

முதல் விசாரணை

1. நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 31.05.2016 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் உலகநாதன் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த காவல் நிலைய குற்ற எண்.137/2016 , சட்டபிரிவுகள் 294(பி), 323, 506(1) இதச வழக்கினை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகன், கருப்பசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகும். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும். சாட்சிகள் செல்வக்குமார், தர்மராஜ், முருகன், கருப்பசாமி, மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் உலகநாதன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

காயம்பட்ட மாரியப்பன் என்பவருக்கு சிகிச்சை அளித்த தென்காசி அரசு மருத்துவர் மூர்த்தி ராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றேன். எதிரிகள் முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. அத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி

அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வரைபடத்தில் அம்புஜம் என்பவர் பிளாட் இருப்பதாக துலங்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் கட்டிட வேலை நடைபெற்றுக்கொண்டிருந்ததாக வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வரைபடத்தில் கரூர் ஜீப்லி முன்பாக சம்பவம் நடந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் அம்புஜத்தை சாட்சியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். யாருடைய இடத்தல் கொத்தனர் வேலை நடந்து கொண்டிருந்தது என்று குறிப்பிட்டு அ.சா.1 புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். கொத்தனார் வேலை பார்த்ததாக கூறி யாரையும் இந்த வழக்கில் கண்கண்ட சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எந்த ஆட்டோவில் மருத்துவமனைக்கு சென்றேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனது விசாரணையில் இடது முன்னங்கை, கழுத்து, முதுகு ஆகிய இடங்களில் வலி இருப்பதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனது விசாரணையில் அம்புஜம் என்பவரின் இடத்திற்குரிய ஆவணங்கள் எதையும் என்னிடம் கொடுத்தாரா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடத்தில் எதிரிகள் 4 பேர் வந்ததாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 சம்பவத்தின் போது தன்னை கம்பியால் எதிரிகள் தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 அவருடைய வாக்குமூலத்தில் முதுகு, முட்டியில், வயிற்றில் வலி இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 விசாரணையில் போது சம்பவத்தின்போது மயக்கம்போட்டு விழுந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 சம்பவத்தின்போது மருத்துவமனைக்கு அவரது வாகனத்தில் போனதாகவும், என்னிடம் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் ஆயுதங்கள் எதையும் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் இல்லை. அ.சா.1 மருத்துவ விசாரணையின்போது தலையில் வலது பக்கம் காயம் இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் 1வது எதிரி செல்வக்குமார் புகார்தாரர் மாரியப்பன் என்பவர் தன்னை அதே நாள் அதே சம்பவத்தில் அசிங்கமாக பேசி, தன்னை தாக்கி கொலைமிரட்டல் விடுத்ததாக குற்ற எண்.138/2016

வழக்கு உள்ளது என்றால் தெரியாது. அந்த வழக்கில் நான்தான் புலன்விசாரணை அதிகாரி என்றால் சரிதான். அந்த வழக்கு எஸ்.டி.சி.எண். 2686/2016 ஆக நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

இந்த வழக்கில் எதிரிகள் வழக்கில் சொல்லக்கூடிய பி.எஸ்.ஓ.வை சரியான முறையில் பின்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள், நேரத்தில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லக்கூடிய பார்வை மகஜர் மற்றும் வரைபட சாட்சிகள் கையெழுத்து போட வில்லை என சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல், ஒருதலைபட்சமாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.06.29 17:37:57 +0530

Judicial Magistrate, Shenkottai